*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **07 செப்டம்பர், 2021**

## பத்திரிகை செய்தி

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் புதுச்சேரி, லாஸ்பேட்டை, தாகூர் கலைக் கல்லூரியில் கோவிட் நினைவுத் தோட்டம் மற்றும் திறந்தவெளி வகுப்பறை ஆகியவற்றை தொடங்கி வைத்தார். துணைநிலை ஆளுநர் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டார். மேலும், கல்லூரியன் பசுமை சூழலையும், அங்குள்ள நாகலிங்க மரம், பட்டாம்பூச்சித் தோட்டம், மாணவர்கள் வரைந்த சுவர் ஓவியங்கள், ஆகியவற்றையும் பார்வையிட்டார். தாகூர் கலைக் கல்லூரி முதல்வர் திரு சசிகாந்த தாஸ், பேராசியரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். திறந்தவெளி வகுப்பறையைத் திறந்து வைத்து மாணவர்களோடு உரையாடினார். மாணவர்களிடையே பேசிய துணைநிலை ஆளுநர்,

- இயற்கையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் வகையில் மாணவர்கள் மரங்களை நட்டு பாதுகாக்க வேண்டும். மரங்கள் நமக்கு தேவையான பிராண வாயுவைத் தருகிறது. அனைவருக்கும் பயன்படும் வகையிலான மரங்களை நடவேண்டும் அது நமக்கும் பறவைகளுக்கும் பயன் அளிக்கும்.
- நாட்டின் 75வது சுந்தர தினத்தை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்ற பாரத பிரதமர் மோடி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப, புதுச்சேரியில் 75 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. பசுமையான புதுச்சேரியை உருவாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசி மட்டுமே கொரோனா மூன்றாவது அலையைத் தடுக்கக்கூடியது. பசுமையான புதுச்சேரி மட்டுமல்லாமல் கொரோனா இல்லாத வளமான புதுச்சேரியை நாம் உருவாக்க உறுதி ஏற்க வேண்டும்

என்று கேட்டுக் கொண்டார்.